# ஆண்டவரின் திருமுழுக்கு விழா

## இரண்டாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

இறைமகனே மனிதரின் கையால் திருமுழுக்கு பெற்று, எளிமையை அணிந்த ஆண்டவரின் திருமுழுக்கு விழாத் திருப்பலிக்கு இறைவனைப் புகழ அழைக்கப்பட்டிருக்கிறோம்.

திருமுழுக்கு என்பது கத்தோலிக்கத் திருச்சபையில் நடைபெறும் ஒரு சம்பிரதாயச் சடங்கு அல்ல. தூய ஆவியின் துணையை இறைவன் அருளால் பெற்றுக் கொள்ளும் விசுவாசமே ஆகும். தூய ஆவியையும் அவரின் வல்லமையும் பெற்றுக் கொள்ள இறைவனை நோக்கி மன்றாடுவோம்.

இன்றைய முதல் வாசகத்தில், "நீங்கள் அனைவரும் நீர்நிலைகளுக்கு வாருங்கள், நீங்கள் வாழ்வீர்கள்" என்று இறைவன் வழங்கும் ஆசியை எடுத்துரைக்கிறார் எசாயா இறைவாக்கினர். நீர்நிலைகளில் வாழ்வு பொதிந்துள்ளதா? இல்லை. திருமுழுக்கு என்பது நீர்நிலைகளில் நடைபெறும் அனுபவம். திருமுழுக்கின் மூலம் இறைவனின் வல்லமையான தூய ஆவியைப் பெற்றுக் கொண்டு வாழுங்கள் என்பதே எசாயா இறைவாக்கினரின் வாக்கு.

இன்றைய நற்செய்தியில், தூய ஆவியால் திருமுழுக்கு கொடுக்கும் இயேசுவையும் அவரின் வல்லமையும் பற்றி திருமுழுக்கு யோவான் எடுத்துரைக்கிறார். "என் அன்பார்ந்த மகன் இவரே, இவரில் நான் பூரிப்படைகிறேன்" என்று இறைவன் தன் மைந்தனில் மகிழ்வதைக் காண்கிறோம்.

மகனை உலகிற்காக கையளித்த தந்தை பூரிப்படைகிறார்.

தந்தையின் வாக்கை வாழ்வாக்க

தம் வாழ்வையே கையளிக்க மகன் ஆர்வமடைகிறார்.

நாம் இறைவனின் உன்னத அன்பையும் இறை இயேசுவின் எளிமையையும், தூய ஆவியாரின் துணையிருப்பையும் கேட்டு மன்றாட இப்பலியில் பங்கேற்போம்.

### இறைமக்களின் மன்றாட்டுகள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. தூய ஆவியாம் துணையாளரை அனுப்புபவரே எம் இறைவா!

திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், பொதுநிலையினர் யாவரும் தூய ஆவியின் வல்லமையைப் பெற தம்மையேத் தயார்படுத்தி, தூய ஆவியின் கனிகளைச் வெளிப்படுத்தும் வாழ்வு வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பின் தெய்வமே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் அரசியல் தலைவர்கள், சுயநலப் போக்கைக் கைவிட்டு, எளிய மக்களின் வாழ்வுக்காக திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தவும், நாட்டின் முதன்மைத் தொழிலாம் விவசாயத்திற்கு ஆதரவாகச் செயல்படும் ஞானத்தை இறைவன் வழங்க வேண்டுமென்று மன்றாடுகிறோம்.

3. ஆண்டவரைக் காண வாய்ப்புள்ளபோதே அவரைத் தேடுங்கள் என்று உரைப்பவரே எம் இறைவா!

நாங்கள் உலக நாட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நேரத்தைக் குறைத்து, இறைவனை நாடித் தேடவும், அதற்கான நேரத்தை முதன்மைப்படுத்தவும், அதிகப்படுத்தவும், பிறரன்புச் செயல்களில் எங்களை ஈடுபடுத்துவதன் மூனல் இறைவனுக்கு அருகில் இருக்கவும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. புதிய ஆண்டினைத் தந்து ஆசீர்வதிப்பவரே எம் இறைவா!

புத்தாண்டிலே அனைவரும் இறை அரவணைப்பில் வாழவும், நோய்த் தொற்று குறையவும், வேளாண்மை சிறக்கத் தேவையான கால சூழல் நிலவவும், படிக்கும் மாணவர்கள் எதிர்கால குழப்பம் தீர்ந்து தெளிவு பெறவும், வேலைவாய்ப்பு, திருமணம், குழந்தை வரம் வேண்டுவோர் உமது அருளால் பெற்று மகிழ வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி: திருமதி ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“GOD IS LOVE”**

**Rev. Fr. Amirtha Raj Sundar J.,**

amirsundar@gmail.com;

+ 91 944 314 0660;

www.arulvakku.com